ஒரே நாடு, ஒரே தேர்தல் சட்ட மசோதா

# அரசியல் அமைப்பு சாசனத்திற்கும் கூட்டாட்சிக்கும் எதிரானது!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கருத்து!



**புதுடெல்லி, டிச. 18 -**

**ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதா அரசியலமைப்பு சாசனத்திற்கும் மக்களுக்கும் கூட்டாட்சிக்கும் எதிரானது என நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தெரிவித்துள்ளார்.**

ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதா டிசம்பர் 17ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், திமுக உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகள் இதை கடுமையாக எதிர்த்தன.

இந்த சட்ட மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிற நிலையில், திமுகவின் நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி இந்த விவகாரம் குறித்து நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசினார்.

அப்போது அவர், "ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதாவை திமுக தொடர்ந்து உறுதியாக முழுமையாக எதிர்த்து வருகிறது.

இந்த சட்ட மசோதா அரசியலமைப்பு சாசனத்திற்கும் கூட்டாட்சிக்கும் எதிரானது.

அது மட்டுமல்ல பல்வேறு தேர்தல்களில் மக்கள் தங்கள் விருப்பப்படி அளித்த வாக்குரிமைக்கும் எதிரானதாக இருக்கிறது. மக்கள் பல்வேறு மாநிலங்களில் ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய்வதற்கு மாநில அரசுகளை தேர்ந்தெடுத்துள்ளனர்.

மக்களிடம் இருக்கும் இந்த உரிமையை பறித்து தேர்தல் ஆணையத்திடம் அளித்து, அந்த அரசுகள் எவ்வளவு வருடம் நீடிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையமே முடிவு செய்வது என்பது மாநில அரசுகளுக்கும் அரசியலமைப்பு சட்டத்துக்கும் எதிரானது. இந்த மசோதா இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்புக்கு எதிரானதாக அமைந்துள்ளது.

இதனால் இந்த சட்ட மசோதாவை நாங்கள் ஏற்கப் போவதில்லை. முழுமையாக எதிர்க்கிறோம்"

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்.

---

தினந்தோறும் திருப்பதி விரைவு தரிசன டிக்கெட்டுகள்

# தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஒதுக்கித் தர வேண்டும்!

## ஆந்திர அமைச்சரிடம் – சுற்றுலாத் துறை அமைச்சர் ராஜேந்திரன் கோரிக்கை!



நெல்லூர், டிச. 18 -

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் (TTDC) 1974 ஆம் ஆண்டு முதல் சென்னையிலிருந்து ஒருநாள் திருப்பதி சுற்றுலா பயணத்தை (திறந்த முறை டிக்கெட் / இலவச தரிசனம்) இயக்கி வருகிறது. 1997 ஆம் ஆண்டு திருமலை திருப்பதி தேவஸ்தானம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அழைத்து வரப்படும் பக்தர்களுக்கு, விரைவான தரிசனத்திற்கு அனுமதி அளித்து, சீக்கிர தரிசன டிக்கெட்டுகளை அறிமுகப்படுத்தியது. தற்போதுவரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு தினசரி 400 சீக்கிர தரிசன டிக்கெட்டுகள் ஒதுக்கீடு செய்ததன் அடிப்படையில், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களான சென்னை, கோவை, மதுரை, ஒசூர், கடலூர் மற்றும் பழனி ஆகிய மாவட்டங்களிலிருந்து திருப்பதிக்கு பக்தர்கள் தரிசனத்திற்கான பயணம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது திருமலை திருப்பதி தேவஸ்தானம், அனைத்து மாநிலங்களுக்கான சுற்றுலா மற்றும் பிற துறைகளுக்கான SED (சிறப்பு நுழைவு தரிசனம்) டிக்கெட்டுகள் வழங்குவதை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

சீக்கிர தரிசன டிக்கெட் (SED) டிக்கெட்டுகளை ரத்து செய்வது, தமிழ்நாட்டிலிருந்து திருமலை திருப்பதி தேவஸ்தானம் வழிபாட்டிற்காக வரும் பக்தர்களை மிகவும் பாதிக்கும் என்பதால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இதுதொடர்பாக தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் , ஆந்திரபிரதேச மாநிலத்தின் அறநிலையங்கள் துறை அமைச்சர் அன்னம் ராமநாராயண ரெட்டி அவர்களை நேற்று ஆந்திர மாநிலம், நெல்லூரில் நேரில் சந்தித்து, மீண்டும் தினந்தோறும் திருப்பதி சீக்கிர தரிசன டிக்கெட்டுகளை, பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இந்நிகழ்வின்போது ஆந்திர மாநில, நகராட்சி நிர்வாகம் மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் நாராயணரெட்டி, சட்டம் - ஒழுங்கு மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் என்.எம்.பரூக் ஆகியோரும் உடன் இருந்தனர்.

---

# தாம்பரம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனைக்கு கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

தாம்பரம், டிச.18-

தாம்பரம் சானடோரியத்தில் நிறு வப்பட்ட அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை (GHTM), நுரையீரல் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும், பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும், குறிப்பாக காச நோய் (TB) மற்றும் எச்.ஐ.வி. / எய்ட்ஸ் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கும் ஒரு முன்னோடியாக திகழ்கி றது. 776 படுக்கைகளுடன் கூடுதலாக 120 படுக்கைகள் உள்ள மறுவாழ்வு மையத்தில், 31 வார்டுகளிலுள்ள 100க்கும் மேற்பட்ட உள்நோயாளிகளுக்கு தொற்று மற்றும் தொற்று அல்லாத நுரையீரல் நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிப்பதில் இம்மருத்துவமனை முக்கிய பங்கு வகிக்கிறது.

இங்கு காசநோய், எச்.ஐ.வி / எய்ட்ஸ், நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் (COPD), ஆஸ்துமா, ஒவ்வாமை மூச்சுக்குழாய் அழற்சி, மூச்சுக்குழாய் தளர்ச்சி, நுரையீரல் அழற்சி, திசு இடைநார் நுரையீரல் நோய்கள் (Interstitial lung Diseases), நுரையீரல் புற்றுநோய் (Lung Malignancies) மற்றும் பல்வேறு வகையான சுவாசக் கோளாறுகளுக்கு மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது. எச்.ஐ.வி. மற்றும் காசநோய் சிகிச்சைக்கான சிறந்த மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை (GHTM) இத்தகைய தீவிர சிசிக்சைகளுக்கு பயனளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அண்மைக் காலங்களில், இந்த மருத்துவமனை நாள்பட்ட சுவாச நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அர்ப்பணிப்புடன் விரிவான சிகிச்சை அளிப்பதற்கு, அதிநவீன மறுவாழ்வு மையம் ஒன்றை நிறுவியுள்ளது. இந்த மறுவாழ்வு மையம் தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் அண்மையில் தொடங்கி வைக்கப்பட்டது.

அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை, ஆண்டுக்கு சுமார் 1,60,000 வெளிநோயாளிகள், 15,000 உள்நோயாளிகள் மற்றும் 4,000 எச்.ஐ.வி நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதுடன், மாநிலத்தின் அதிகரித்து வரும் சுகாதாரத் தேவைகளை தொடர்ந்து நிறைவு செய்து வருகிறது. உலக வங்கியின் நிதியுதவியுடன், தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டத்தின் (TNHSRP) கீழ், 8.23 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மேம்பாட்டு பணிகளில், நுழைவு வளைவு, சுற்றுச்சுவர், மருத்துவமனை வளாகத்தின் உட்புற அணுகு சாலைகள், மழைநீர் வடிகால், அதிகப்படியான தண்ணீரை தேக்கி வைக்கும் தொட்டி (Sump), தீயணைப்பு ஏற்பாடு முறைகள், மருத்துவ எரிவாயு இணைப்பு, மின்மாற்றி ஏற்பாடுகள் ஆகியவை அடங்கும்.

இந்த மேம்படுத்தப்பட்ட வசதிகளானது தமிழ்நாட்டு மக்களுக்கு எளிதான மற்றும் மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதி வழங்கிட வேண்டும் என்ற அரசின் உயரிய நோக்கத்தை பிரதிபலிக்கிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் இளைஞர் எழுச்சி நாளை பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி பூவிருந்தவல்லி நகர கழக செயலாளர் ஜி. ஆர். திருமலை, ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு நாசர் கலந்துகொண்டு ஹாட் பாக்ஸ் பெண்களுக்கு புடவை விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார் உடன் மாநில ஆதிதிராவிட நலகுழச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம். எல். ஏ. பேச்சாளர்கள் வழக்கறிஞர் மதிவதனி, சந்தோஷ் ஜெய், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெரால்டு, மா.ராஜி, எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதரன், சன் பிரகாஷ், ப.ச. கமலேஷ், காஞ்சனா சுதாகர், க.ஸ்ரீதர், தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லி ராணி மலர் மன்னன், அசோக் குமார், ஜே. சுதாகர், இரா. புண்ணியகோட்டி, அன்பழகன், சௌந்தராஜன், அமிதாப், உமா சங்கர், சத்யா, உள்பட பலர் உள்ளனர்

---

ஏற்கனவே அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட

# தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் 22.12.2024 ஞாயிறு அன்று நடைபெறும்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, ஒத்திவைக்கப்பட்டட தி.மு.க. தலைமைச் செயற்குழு கூட்டம் கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 22–12–2024 **ஞாயிறு அன்று காலை** 10.00 **மணி அளவில்** சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : கழக ஆக்கப் பணிகள்**

குறிப்பு : ஏற்கனவே அனுப்பப்பட்ட அழைப்பு கடிதத்தினை தவறாது கொண்டு வர வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 17.12.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

கோல்டு டி.பிரகாஷ் ஏற்பாடு! ப.குணாளன் – என்.சந்திரன் வரவேற்பு!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நலஉதவிகள்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்குகிறார்! ஐ.லியோனி – டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி பங்கேற்பு!

சென்னை,டிச.18-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் தி.மு.க. இளைஞர்அணி சார்பில் இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் - நலஉதவிகள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஏற்பாட்டில் நாளை (19.12.2024 வியாழக்கிழமை) மாலை 5.00 மணிக்கு தர்மராஜா கோவில் தெரு, ஆலந்தூர் 16.ல் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர்கள் ஆலந்தூர் ப.குணாளன், என். சந்திரன் எம்.பி. ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் பொது மக்களுக்கு நல உதவிகளை வழங்குகிறார்.

இதில் திண்டுக்கல் ஐ. லியோனி, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் மீ.அ.வைத்தியலிங்கம், எஸ். ஆர்.ராஜா எம்.எல்.எ., இ.கருணாநிதி எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ., பிரபு கஜேந்திரன், இரா. ராஜீவ்காந்தி ரூ.கீர்த்தனா, டி.பாபு, ஏ.வந்தேமாதரம், ஜி.கே.விவேகாநந்தன் [ஏ] ரவி, எம்.எஸ்.கே.இப்ராகிம் ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், இரா.பாஸ்கரன் உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிக்ள பங்கேற்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் கே.பி.முரளிகிருஷ்ணன் நன்றியுரையாற்றுகிறார்.

கோ.பிரவீன்குமார், எஸ். ஜெனார்த்தனன், எம்.விக்னேஷ், சுனில் பால்ராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

---

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர், டிச.18-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழிநுட்ப அணி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் (எனது) தலைமையில் 21-12-2024 சனிக்கிழமை காலை 10.00 மணி அளவில் திருத்தணி நகரத்தில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளரும், சென்னை மண்டல பொறுப்பாளருமான சி.எச்.சேகர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்க உள்ளார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர், திரு வள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத்தலைவர் திராவிட பக்தன் உள்ளிட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள் இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் மாவட்ட தொகுதி, ஒன்றிய, நகர, பேரூர், கழக ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளின் கழக ஆக்க பணிகள்

2. வருகின்ற டிசம்பர் 26 அன்று மாதாவரத்தில் நடைபெறவுள்ள தகவல்தொழில்நுட்ப அணி சென்னை மண்டல ஆய்வு கூட்டம் குறித்து.

என மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை வாயிலாக தெரிவித்துள்ளார்.

---

முரசொலி நிர்வாக மேலாளர்

# ஜி.இளங்கோ மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, டிச.18–**

**'முரசொலி' நாளேட்டில் நிர்வாக மேலாளராகப் பணி புரிந்து வந்த ஜி.இளங்கோ (வயது 54) அவர்கள் நேற்று (17.12.2024) பிற்பகல் இயற்கைஎய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தமது ஆழ்ந்த இரங்கலைத்தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முரசொலிநாளேட்டில்விநியோகப்பிரிவில் 27 ஆண்டுகள் பணி புரிந்து வந்த ஜி.இளங்கோ அவர்கள் உடல் நலக் குறைவின் காரணமாக மறைவுற்றார் என்ற செய்தியறிந்ததும் அதிர்ச்சியுற்றேன்.

முரசொலி அலுவலகத்திற்கு நான் வரும்போதெல்லாம் என்னை இன்முகத்துடன் வரவேற்ற காட்சிகள் இன்றும் என் மனதில் நிழலாடிக் கொண்டிருக்கிறது.

சிறிது நாட்களாக உடல் நலம் குன்றி மருத்துவ மனையில் சிகிச்சைப் பெற்று வந்த அவர் உடல் நலம் தேறி மீண்டும் பணிக்குத் திரும்பிவிடுவார் என நினைத்திருந்தேன்.

ஆனால், இன்று (17.12.2024) பிற்பகல் இறந்துவிட்டார் என்ற செய்திக் கேட்டு அதிர்ச்சியுற்றேன்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் முரசொலி அலுவலகத்தில் பணியாற்றுவோருக்கும் எனது ஆழ்ந்தஇரங்கலைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

# முரசொலி நிர்வாக மேலாளர் ஜி. இளங்கோ மறைவு !

## கழகத்தினர் - உறவினர் அஞ்சலி!

சென்னை, டிச.18–

முரசொலி அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவின் மேலாளரும் தலைமைக் கழகப் பேச்சாளர் வழக்கறிஞர் ஆடுதுறை மு.உத்திராபதி அவர்களின் மைத்துனருமான ஜி.இளங்கோ (வயது 54) அவர்கள் உடல் நலக் குறைவினால் நேற்று (17.12.2024 செவ்வாய்க்கிழமை) மதியம் 1.45 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் முரசொலி அலுவலகத்தினரும், கழகத்தினரும் சென்னை, சூளைமேடு, அண்ணாசாமி தெருவில் உள்ள அவரது வீட்டிற்கு நேரில் சென்று மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ஜி. இளங்கோ அவர்கள், முரசொலி அலுவலகத்தில் விநியோகப் பிரிவிலும் நிர்வாகமேலாளராகவும் சுமார் 27 வருடங்கள் பணியாற்றினார்.

அன்னாருக்கு கவிதா என்ற மனைவியும், முத்து நாகலிங்கம் என்ற ஒரு அண்ணனும் அண்ணாமலை (எ) நலங்கிள்ளி என்ற ஒரு தம்பியும் மங்கை என்ற தங்கையும் உள்ளனர்.

அன்னாரது உடல் அவரது சொந்த ஊரான நாகைக்கு எடுத்துச் செல்லப் பட்டு இன்று (18.12.2024) நாகை மகாலட்சுமி நகரில் உள்ள அவரது இல்லத்தில் உறவினர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.